தான். வாழ்த்தக் கூடியதொன்றுதான். இது போன்ற உரையை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை, இது போன்று சுருக்கமாகச் சொல்லி, தெளிவாக விளக்கக்கூடிய உரைக்குச் செயல்வடிவம் ஏற்படும்போது, தமிழகத்திற்குக் குறைகள் ஏற்படாது என்று நிச்சயமான நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும் என்று கூறிக் கொண்டு, இங்கு பேச வாய்ப்பு தந்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். அப்போது அரசினர் மசோதாக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

1. Seventeenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1973–74 (English and Tamil). [Laid on the Table of the House under section 75 (1-A) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

B. *Reports, Notifications and other papers.*

* 1. Governor's Address to the Members of the Legislature on 7th July 1977. (English and Tamil).

---

*Circulated to Members on 7th July 1977.